# எலும்பு மஜ்ஜை தானம் சைக்கிளில் விழிப்புணர்வு




■ எலும்பு மஜ்ஜை தான விழிப்புணர்விற்காக, கிழக்கு கடற்கரை சாலையில், மிதிவண்டியில் பயணித்த தன்னார்வலர்கள். இடம்: மாமல்லபுரம்.

**மாமல்லபுரம், செப். 4–**

எலும்பு மஜ்ஜை தானம் வலியுறுத்தி, தன்னார்வ குழுவினர், மிதிவண்டியில் பயணித்து, விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

சர்வதேச எலும்பு மஜ்ஜை தானம் தினம், செப்டம்பர் இரண்டாம் சனிக்கிழமை கடைபிடிக்கப்படுகிறது.

இந்நாளை முன்னிட்டு, கிழக்கு கடற்கரை சாலையில், தன்னார்வ குழுவினர் நேற்று, மிதிவண்டிகளில் விழிப்புணர்வு பயணம் சென்றனர்.

ரத்தப் புற்று, ரத்த உற்பத்தி குறைபாடால் உருவாகும் தலசீமியா ஆகிய நோய்களால் பாதிக்கப்பட்டோரை, எலும்பு மஜ்ஜை அறுவை, 'ஸ்டெம் செல்' மருத்துவத்தால் குணப்படுத்த இயலும். ஆனால், எலும்பு மஜ்ஜை தானம் குறித்த விழிப்புணர்வு, பொதுமக்களிடம் இல்லை.

இதுகுறித்த விழிப்புணர்வை, சென்னை, 'தாத்ரி' நிறுவனம் ஏற்படுத்துகிறது.

சென்னை, தரமணி டைடல் பார்க் பகுதியில், மிதிவண்டி பயணத்தை, தமிழக சைக்கிள் பயண வீராங்கனை அனாஹீதா ஸ்ரீபிரசாத், வீரர், ராகுல் டிரெக்கர் துவக்கி வைத்தனர். 'தாத்ரி' நிறுவன தலைமை செயல் அலுவலர் ராகுல் ராஜகோபால் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

கிழக்கு கடற்கரை சாலையில், 25, 50, 100 கி.மீ., தொலைவுகளில் என, 400 பேர் பங்கேற்று, மாமல்லபுரம் சென்று, மீண்டும் சென்னையை வந்தடைந்தது.